செய்தி வெளியீடு எண்–221 நாள்–19.03.2008

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (19.03.2008), தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலவரம், குற்ற நிகழ்வுகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், காவல் துறைத் தலைமை இயக்குநர், காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றப்புலனாய்வுத் துறை), சென்னை மாநகரக் காவல் ஆணையர், காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (நுண்ணறிவு), காவல் துறைத் தலைவர் (நுண்ணறிவு), மண்டல காவல் துறைத் தலைவர்கள், மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மாநகரக் காவல் ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

மாநிலத்தில் தற்போதுள்ள சட்டம் ஒழுங்கு சம்பந்தமான அமைதியான நிலைமை தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், சட்டம் ஒழுங்கிற்கு பங்கம் விளைவிக்கும் எந்த நடவடிக்கையும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். அதே போல், சாலை விபத்துகளைக் குறைக்க, சாலை விதிகளை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும், குற்ற நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது உடனடியாக தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.